Chenkaantal
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

Volume - 1, Issue - 1, November 2021 E-ISSN: 2583-0481

# Architectural Style of Our Lady of Ransom Church in Kanniyakumari

**Dr J. Benny**, Assistant Professor, Tamil Research Centre, S.T. Hindu College, Nagercoil – 02.
**ORCiD:** https://orcid.org/0000-0001-7695-3738
**DOI: 10.5281/zenodo.5735412**
**Received** 15 July 2021; **Revised form** 12 August 2021; **Accepted** 22 August 2021; **Available online** 26 November 2021

## Abstract

*In Kanniyakumari, the Church art and architecture of the Christian faith has the presence of Gothic style in general. In the region, it has been greatly influenced by those of the western nations and has been influenced by the artistic and architectural traditions of the western culture and tradition. Altars, statues, pulpits, crosses, bells and belfries of churches along with other household items are among the many things that form part of the sacred art of the Indian churches. The style of the church was most patronized and is generally referred to as British style which includes Neo-Gothic and Gothic Revival architecture. This paper seeks to highlight the uniqueness of gothic architecture found in the Church Our Lady of Ransom in Kanniyakumari.*

**Keywords**: Our Lady of Ransom Church, Kanniyakumari, Gothic Architecture.

## References

[1] Issac Arul Das. G, Kumari Mannil Christhavam, Tamil Research Center, Nagercoil, 2012
[2] Narseesan.S.R, Kumari Christhavargalin Payanapaathai, Nanjil Pathippagam, Nagercoil, 2012.
[3] *Gothic Architecture*. Britannica. www.britannica.com>art 23.11.2021.
[4] *Gothic Architecture*. Wikipedia. en.m.wikipedia.org>wiki 23.11.2021.
[5] Our Lady of Ransom Church in Kanyakumari, Wikipedia. en.m.wikipedia.org>wiki 23.11.2021.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

மலர் - 1, இதழ் - 1, கார்த்திகை 2052 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# கன்னியாகுமரி தூய அலங்கார உபகார அன்னை திருத்தல கட்டிடக்கலை அமைப்பு

**முனைவர் ஜோ. பென்னி,** உதவிப்பேராசிரியர், தமிழ்க்கலை ஆய்வகம், தெ.தி.இந்துக்கல்லூரி, நாகர்கோவில் - 02.
**ORCiD:** https://orcid.org/0000-0001-7695-3738
**DOI: 10.5281/zenodo.5352536**

**ஆய்வுச்சுருக்கம்**

*இந்தியாவின் தென்கோடியில் உள்ள கன்னியாகுமரியில் அமைந்துள்ளது தூய அலங்கார உபகார அன்னை தேவாலயம். பிறநாட்டினராலும், பிறமதத்தவராலும் பெரிதும் ஈர்க்கப்பட்டது இவ்வாலய கட்டிடக்கலை அமைப்பாகும். கிறித்துவ மதம் இந்தியாவில் வேரூன்றிய காலம் தொட்டே கிறித்துவ கோயில் கலை மற்றும் கட்டிடக்கலை அமைப்பானது உள்ளூர் கட்டிடக் கலை மரபுகளால் பல்வேறு மாற்றத்திற்கு உள்ளானாலும், இவ்வாலயம் பிரிட்டிஷ் பாணியான கோதிக் மற்றும் நியோகோதிக் பாணியிலே கட்டமைக்கப் பட்டுள்ளன. இத்தேவாலயத்தில் அமைந்துள்ள பலிபீடங்கள், சிலைகள், சிலுவைகள், மணிகள் முதலியனவும் பிற நுட்பங்களும் இந்திய கிறித்தவ கட்டிடக்கலையின் சிறப்பம்சங்களாகும். இவ்வாய்வுக் கட்டுரையானது குமரியில் அமைந்துள்ள தூய அலங்கார உபகார அன்னை ஆலயக் கட்டிடக்கலையின் தனித்துவத்தை முன்னிலைப் படுத்துவதாக அமைகிறது.*

**திறவுச்சொற்கள்:** உபகார அன்னை ஆலயம், கன்னியாகுமரி, கோதிக்கலை.

**முன்னுரை**

மனித வாழ்க்கைக்கு இன்றியமையாத தேவையாகக் கருதப்படுபவை உணவு, உடை, உறையுள் ஆகும். மனிதன் பாதுகாப்பாக வாழ, தனக்கொரு இருப்பிடம் அமைக்க எண்ணிய எண்ணமே கட்டிடக்கலையின் தோற்றத்திற்கு வித்திட்டது. கட்டிடக்கலை சமுதாயத்தில் பிற கலைகளும், தொழில்களும் வளர இடமளிக்கும் கலையாகும். ஆதிகாலத்தில் இயற்கையை வழிபட்ட மனிதன், தான் வணங்கும் தெய்வத்திற்கென்று உரிய பெயரிட்டு, உருவமிட்டு வழிபட தொடங்கிய நாட்களில் வழிபடுவதற்கென்று கட்டிடங்களை உருவாக்க முற்பட்டான். அதன் விளைவாக

பல்வேறு கட்டிடப்பாணியிலும், நமது நாட்டின் பாரம்பரியம், கலாச்சாரம், பண்பாடு ஆகியவற்றை வெளிக்காட்டும் வகையிலும், பல சமயக் கோயில்களும், கட்டிடங்களும் கட்டப்பட்டன. இந்நிலையில் மேலை நாட்டார் வருகையும், அவர்களது சமயப் பணியும் கோயில் கட்டிடக்கலையில் பெருமாற்றத்தை ஏற்படுத்தின. குறிப்பாக கிறித்தவ சமயம் இந்தியாவில் பரவ ஆரம்பித்த பின்னர் கிறித்தவ கட்டிடக்கலைப் பாணியில் பல ஆலயங்கள் கட்டப்பட்டன. அந்த வகையில் கிறித்தவ கோதிக் கட்டிடக்கலைப்பாணியில் அமைந்த கன்னியாகுமரி தூய அலங்கால உபகார அன்னை திருத்தலத்தின் கட்டிடக் கலை அமைப்பைப் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

**இந்தியாவில் கிறித்தவம்**

கிறித்தவம் மேலை நாடுகளுக்குச் செல்வதற்கு முன்னரே இந்திய திருநாட்டிற்குள் வந்துவிட்டது. இயேசு கிறத்துவின் பன்னிரெண்டு சீடர்களுள் ஒருவரான புனித தோமையார் இந்தியாவுக்கு வந்து கிறித்தவ சமயத்தை நிறுவினார் என பழங்கால வரலாற்று ஆவணங்கள் சான்று பகர்கின்றன. கிறித்தவ ஆய்வாளர்களின் கருத்து மற்றும் மரபின் படி, தோமையார் கடல் வழியாகப் பயணம் செய்து கேரளாவின் கிரங்கனூர் (முசிறி) துறைமுகத்திற்கு கி.பி. 52-ஆம் ஆண்டு வந்து இறங்கினார். மேற்கு கடலோர ஊர்களில் இயேசுவைப் பற்றி அறிவித்து ஏழு இடங்களில் திருச்சபையை நிறுவினார். பின்னர் கிழக்குப் பகுதிக்கு வந்து, சோழ மண்டல கடற்கரையில் நற்செய்தியை அறிவித்தார். சென்னை, மயிலாப்பூர் உள்ளிட்ட இடங்களில் பலரை கிறித்தவர்களாக மனந்திருப்பினார்.

தோமையார் தமிழகத்தில் கிறித்தவ மதத்தை நிறுவிய அதே காலத்தில், திருத்தூதர் பர்த்தலமேயு மும்பையில் இயேசுவின் நற்செய்தியை அறிவத்ததாக வரலாற்றுப் பதிவுகள் உள்ளன. முதல் நூற்றாண்டில் இந்தியாவில் உருவான கிறித்தவ சமூகங்கள் மற்றவர்களை மதமாற்றம் செய்வதில் ஆர்வம் காட்டவில்லை. இதனால் இந்தியாவில் கிறித்தவம் சில குடும்பங்களுக்குள் மட்டுமே முடங்கிக் கிடந்தது. கி.பி. 2-ஆம் நூற்றாண்டில் மும்பைக்;கு வந்த பார்த்தனேயுஸ் என்ற கிரேக்க அறிஞர், திருத்தூதர் பர்த்தலமேயுவால் உருவாக்கப்பட்ட கிறித்துவ சமூகங்களை

சந்தித்ததாக குறிப்புகள் உள்ளன. கி.பி.300-ல் பசாரா ஆயரான தாவீது தென்னிந்திய பகுதிகளில் நற்செய்தி அறிவித்து பலரை கிறித்தவர்களாக மனந்திருப்பினார். அதன் பின்னர் கி.பி. 345-ல் கேரளாவின் திருவிதாங்கோட்டுக்கு 72 குடும்பங்களுடன் வந்த சிரியா நாட்டு வியாபாரியான தாமஸ் கானா என்பவர், சிரியன் கிறித்தவ வழிபாட்டு முறைகளை கேரளாவில் அறிமுகம் செய்தார். இந்த குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் தங்களை 'தெக்கும்பகர்கள்' என்றும், புனித தோமையாரால் கிறிஸ்தவர்களாக மாறியவர்கள் தங்களை 'வடக்கும்பகர்கள்' என்றும் அழைத்துக் கொண்டனர். இவ்வாறு இந்தியாவின் பல பகுதிகளிலும் பரவ தொடங்கிய கிறித்தவ சமயம் 1542ல் தமிழகத்திற்கு வந்த புனித பிரான்சிஸ் சேவியர் மூலமாக தென் கடலோர பகுதிகளில் விரிவுப்படுத்தப்பட்டது. தொடர்ந்து 16 ஆம் நூற்றாண்டில் கத்தோலிக்க குருக்களின் முயற்சியால் மத்திய இந்தியாவிலும் கிறித்தவ சமயம் நிறுவப்பட்டது. மொகலாய பேரரசர் அக்பரின் ஆதரவுடன் டெல்லி, ஆக்ரா, பாட்னா போன்ற பகுதிகளிலும் அவர்கள் இயேசுவின் நற்செய்தியை அறிவித்தனர்.

கிழக்கு இந்தியாவில் தொடங்கப்பட்ட வங்காள மிஷன் மூலம் கூக்ளி உள்ளிட்ட பகுதிகளில் கிறித்தவம் பரவியது. கி.பி.18 ஆம் நூற்றாண்டில் லூத்தரன் மற்றும் ஆங்கிலிக்கன் சபைகளைச் சேர்ந்த கிறித்தவர்கள் இந்தியாவில் மறைபரப்புப் பணியைத் தொடங்கினர். 1837ல் தமிழகத்தில் தொடங்கப்பட்ட புதிய மதுரை மிஷனால் கத்தோலிக்கத் திருச்சபை விரைந்து வளர்ந்தது. அதே காலத்தில் கால்டுவெல் உள்ளிட்டோரின் முயற்சியால் பிற கிறத்தவ சபைகளும் வளர்ச்சி கண்டன. கிறித்தவர்களின் சேவையால் கவரப்பட்ட வடகிழக்கு இந்திய பழங்குடி மக்கள் பெரும்பாலானோர், கி.பி.19 ஆம் நூற்றாண்டில் கிறித்தவத்தை ஏற்றனர். ஆண்டவர் இயேசுவின் நற்செய்தியை அறிவிக்கும் சபைகள் மூலமாக இந்தியாவில் கிறித்தவம் இன்றும் வளர்ந்து வருகிறது.

**கிறித்தவ தேவாலயங்கள்**

கிறித்தவ சமயத்தைச் சார்ந்த மக்கள் வழிபாடு நடத்துவதற்காகக் கூடும் இடம் தேவாலயம் அல்லது கோயில் (Church) என்று அழைக்கப்படுகிறது. கத்தோலிக்க கிறித்தவர்களின் கோயில் 'மாதா கோயில்' என்றும் மக்கள் வழக்கில்

கூறப்படுவதுண்டு. பெரும் எண்ணிக்கையிலான கத்தோலிக்க கோயில்கள் இயேசுவின் அன்னையாகிய மரியாவின் பெயரால் கடவுளுக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளதும் இதற்கு ஒரு காரணமாகும். இத்தேவாலயத்தில் தனித்தனி கிறித்தவ சபைக்குத் தலைமை தாங்கும் குரு அல்லது சபைத் தலைவர் திருப்பலி, நற்கருணைக் கொண்டாட்டம், விவிலியக் கொண்டாட்டம் போன்ற சமயச் சடங்குகளை முன்னின்று நடத்துவார். அவரை தொடர்ந்து அவரின் ஆலோசனைப்படி, கூட்டங்களில் கலந்து கொள்பவர்கள் வழிபாடுகளை செய்கின்றனர். பல தேவாலயங்கள் சிலுவை உருவிலே வடிவமைக்கப்படுகின்றன. கிறித்தவ மதத்தின் முன்னோடியாக அமைந்த யூத மதத்தில் 'தொழுகைக் கூடம்' உண்டு. அந்த வழக்கத்தை பின்பற்றி கிறித்தவர்களும் தங்கள் வழிபாட்டுக்கென தனியே தேவாலயங்களை கட்டத் தொடங்கினர். இத்தேவாலயங்கள் சிற்றாலயம், ஆலயம், பேராலயம், திருத்தலம், மறைமாவட்டப் பேராலயம் என பலவாக வகைப்படுத்தப்படுகின்றன.

- சிற்றாலயம் (Chapel) - ஒரு தனிப்பட்ட நபரோ, அல்லது குழுமமோ வழிபட பயன்படுத்தும் ஆலயம்.
- ஆலயம் (Church) - ஒரு பங்கிலோ அல்லது கிளைப்பங்கிலோ வாழ்கின்ற கிறித்தவ மக்கள் வழிபாட்டுக்காக கூடுகின்ற தொழுகை இடம்.
- பேராலயம் (Basilica) - முக்கிய கிறித்தவ கோவில்களைக் குறிக்கப் பயன்படும் சொல்.
- திருத்தலம் (Shrine) - அதிக அளவில் அற்புதங்கள் நடைபெறுவதாக மக்களால் சுட்டிக்காட்டப்பட்டு, அதிகமான மக்கள் கூடும் ஆலயம்.
- மறைமாவட்டப் பேராலயம் (Cathedra) - கத்தோலிக்க மறைமாவட்டத் தலைவராக விளங்கும் ஆயரின் ஆட்சிப் பீடமாக இருக்கும் தலைமை ஆலயம்.

**கிறித்தவ ஆலயக் கட்டிடக்கலை**

தேவாலயங்களின் கட்டிடக்கலை பெரிய அளவிலான கட்டிடங்களாலும் அதன் வடிவம், செயல்பாடு மற்றும் பாணியின் அடிப்படையிலும் வகைப்படுத்தப்படுகிறது. ஆரம்பகால பெரிய தேவாலயங்கள் பழங்காலத்திலிருந்து வந்தவை. கிறித்தவம் மற்றும் தேவாலயங்களின் கட்டுமானம் உலகம் முழுவதும் பரவிய பிறகு கட்டும் முறை

உள்ளூர் பொருட்கள் மற்றும் உள்ளூர் நுட்பங்களைப் பொறுத்து மாற்றம் பெற்றன. தமிழ் நாட்டிலுள்ள கிறித்தவ கலை மற்றும் கட்டிடக்கலை ஐரோப்பிய காலத்திற்கு முந்தைய காலங்களோடு தொடர்பு கொண்டதோடு மட்டுமல்லாமல் அங்கு வர்த்தகப் பதவிகளைக் கொண்டிருந்த நாடுகள், அதன் பூர்வீக வடிவங்கள், கலை மற்றும் கட்டிடக்கலை நுட்பங்களிலிருந்து உருவாக்கப்பட்டன. போர்த்துக்கீசியம், டச்சு, பிரெஞ்சு மற்றும் ஆங்கிலேயர்களின் வருகை கோயில் கலை மற்றும் கட்டிடக் கலை மீது மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. கிறித்தவக் கோயில் கட்டிடக்கலை அமைப்பை,

- பைசண்டைன் கட்டிடக்கலை
- ரோமனெஸ்க் கட்டிடக்கலை
- கோதிக் கட்டிடக்கலை
- மறுமலர்ச்சி கட்டிடக்கலை
- பரோக் கட்டிடக்கலை
- ரோகோகோ கட்டிடக்கலை

என வகைப்படுத்தலாம்.

**பைசண்டைன் கட்டிடக்கலை**

பைசண்டைன் கட்டிடக்கலை என்பது பைசண்டைன் பேரரசு காலத்தில் உருவாகி வளர்ந்த ஒரு கட்டிடக்கலைப் பாணியாகும். கி.பி.330ல் கொன்ஸ்டண்டைன் உரோமப் பேரரசின் தலைநகரத்தை பைசண்டியத்துக்கு மாற்றியதும் பைசண்டைன் பேரரசு உதயமானது. இந்த பைசண்டியம் என்ற பெயர் பின்னர் கொன்ஸ்டண்டினோப்பிள் என்று மாற்றப்பட்டு, தற்போது இஸ்தான்புல் என வழங்கப்படுகிறது. ஆரம்பகால பைசண்டைன் கட்டிடக்கலை உரோமக் கட்டிடக்கலையின் தொடர்ச்சியாக இருந்தது. இக்கால கட்டிடக்கலைக்கு உதாரணமாக, பைசண்டியம் சுவர்கள் விளங்குகின்றன. அண்மைக்கிழக்கு நாடுகளின் கட்டிடக்கலை செல்வாக்கினால், படிப்படியாகப் புதிய பாணியொன்று உருவாகத் தொடங்கியது. அத்துடன் கிறித்தவ ஆலயக் கட்டிடக்கலையில் இன்று வரை பின்பற்றப்படும் கிரேக்க சிலுவைக் கிடைமட்ட வடிவம் பின்பற்றப்பட்டது.

கற்களுக்குப் பதிலாக செங்கற்கள் பயன்படுத்தப்பட்டன. ஆலயத்தின் வளைவான குவிமாடங்கள் மொசைக்குகளால் அலங்கரிக்கப்பட்டன.

தேவாலயங்களின் மையப்பகுதிகள் பரந்த திறந்த வெளிகளாக அமைக்கப்பட்டு சூரிய ஒளி உள்ளே வருமாறு அமைக்கப்பட்டுள்ளன. தேவாலயத்தின் மிகப்பெரிய சுற்று வளைவுகள் இதன் சிறப்பம்சமாக அமைகிறது. சுற்று வளைவுகளும் அதை தாங்கி நிற்கும் வளைவுகளும் இக்கலைக்கு அடிப்படையாகும். இறுதியில் பைசண்டைன் கட்டிடக் கலை ரோமானெஸ் மற்றும் கோதிக் கட்டிடக்கலைகளுக்கு இடம் விட்டு ஒதுங்கியது. ஆனால் இக்கலையானது ஆரம்பகால இஸ்லாமியக் கட்டிடக் கலையில் குறிப்பிடத்தக்க செல்வாக்கைப் பெற்றிருந்தது. இதற்கு எடுத்துக்காட்டாக டமாஸ்கஸில் உள்ள ‘உம்மாயாட் பெரிய பள்ளிவாசல்’ மற்றும் ஜெருசலேமில் உள்ள ‘டோம் நப்த ரொக்’ ஆகியவற்றை கூறலாம்.

**ரோமனெஸ்க் கட்டிடக்கலை**

ரோமனெஸ்க் கட்டிடக்கலை என்பது மத்தியகால ஐரோப்பாவில் கி.பி. 11ஆம், 12ஆம் நூற்றாண்டுகளில் வளர்ந்திருந்த ஒரு கட்டிடக்கலையாகும். இது உரோமன் கட்டிடக்கலையின் பல சிறப்புக் கூறுகளைக் கொண்டிருந்த காரணத்தால் இதனை வகைப்படுத்துவதற்காக ரோமனெஸ்க் என்னும் பெயரைப் பிற்கால ஆய்வாளர்கள் பயன்படுத்தியிருக்கின்றார்கள். வட்டவடிவ அல்லது சிறிதளவே கூரான வளைவுகள் (arches), உருளை வடிவக் கவிகூரைகள் (barrel vaults), சிலுவை வடிவத் தூண்களால் தாங்கப்பட்ட கவிகூரைகள், இடைவெட்டும் கவிகூரைகள் (groin vaults) போன்றவை ரோமனஸ்க் கட்டிடக்கலையின் சிறப்பம்சங்களாகும். பாரிய வளைவான நுழை வாயில்களைக் கொண்ட கட்டிடங்கள் இக்கட்டிடக்கலையின் புதுமைகளாக விளங்கின. உரோமர் காலத்து கற்சிற்பங்களும் ரோமனஸ்க் காலத்தில் மீண்டும் பயன்பாட்டுக்கு வந்தன. உரோமப் பேரரசு காலக் கட்டிடக்கலைக்குப் பின்னர் முழு ஐரோப்பாவையும் தழுவிய வகையில் ரோமனெஸ்க் கட்டிடக்கலையே பயன்பாட்டில் இருந்ததை அக்கண்டத்தில் எல்லாப் பகுதிகளிலும் காணப்படும் ரோமனெஸ்க் பாணியில் அமைந்த கட்டிடங்களைக் கொண்டு அறிந்து கொள்ளலாம்.

**கோதிக் கட்டிடக்கலை**

கோதிக் கட்டிடக்கலை என்பது ஐரோப்பியக் கட்டிடக்கலையின் ஒரு பாணியாகும். இது தேவாலயங்கள், பேராலயங்கள் போன்றவற்றின் வடிவமைப்புகளோடு தொடர்புடையது. இது கி.பி. 12ஆம் நூற்றாண்டில் பிரான்சில் உருவாகி ஐரோப்பா முழுவதும் பரவியது. பின்னர் கி.பி. 14 ஆம் நூற்றாண்டின் இறுதியில் பன்னாட்டுக் கோதிக் பாணியாக வளர்ச்சியடைந்து. கி.பி. 15ஆம் நூற்றாண்டு வரை தொடர்ந்தது. குறிப்பாக செருமனியில் 16 ஆம் நூற்றாண்டு வரை பயன்பாட்டில் இருந்துள்ளது. கோதிக் கால கட்டிடக்கலையில் சிறப்பம்சங்களாக சிற்பம், மேற்பரப்பு ஓவியம், வண்ணப்பூச்சு கண்ணாடி, சுதை ஓவியம் ஆகியன காணப்படுகின்றன. மேலும், இக்கட்டிடக்கலையில் உயரமான தூண்கள், உயர் வளைந்த கூரைகள் மற்றும் கூர்மையான வளைவுகள் ஆகியன அடங்கும். கோதிக் கட்டிடக்கலை உருவாகி அரை நூற்றாண்டுக்குப் பின்னர், உயர் கோதிக் (Neo-Gothic) கட்டிடக்கலைப் பாணி உருவானது. இக்கட்டிடக் கலையின் தனிச்சிறப்பு உயர்த்தப்பட்ட பட்ரஸைப் பயன்படுத்துவதும், ரோமானஸ் சுவர்களை அகற்றுவதும் ஆகும். மேலும், ஆரம்பகால கோதிக் கட்டுமானங்களை விட அதிக ஒளியை தேவாலயத்திற்குள் நுழைய விடும் வகையில் பெரிய சன்னல்கள் இப்பாணியில் அமைக்கப்பட்டன.

**மறுமலர்ச்சிக் கட்டிடக்கலை**

கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் தோன்றி ஐரோப்பாவில் பரவிய மறுமலர்ச்சிப் பண்பாடு சார்ந்த கட்டிடக்கலையே மறுமலர்ச்சிக் கட்டிடக்கலை ஆகும். இக்கட்டிடக் கலையில் உரோமப் பேரரசு காலத்தில் நிலவிய பண்பாட்டு அம்சங்கள் மீண்டும் புழக்கத்தில் வந்ததால் உரோமக் கட்டிடக்கலையின் உணர்வுபூர்வமான மீள் உருவாக்கமாகவும் இது அமைந்தது. இதற்கு முந்தைய கல்வேலைப்பாடுகளும், ஒழுங்கற்ற முக்கோணக் கூரை முகப்புகளும் அமைந்த பாணிகளுடன் ஒப்பிடுகையில் தூண்களையும் சமச்சீரான வடிவத்தையும் கொண்ட எளிமையான கட்டிடங்களை இப்பாணி வழங்கியது. செந்நெறிக் காலப் பாணித் தூண்களும், வடிவவியல் ரீதியில் அமைந்த வடிவமைப்புகளும், அரைக்கோள வடிவக் குவிமாடங்களும் மறுமலர்ச்சிக் கட்டிடக் கலையின் சிறப்பம்சங்களாகும்.

**பரோக் கட்டிடக்கலை**

இத்தாலி நாட்டில் 17-ஆம் நூற்றாண்டில் உருவானது பரோக் கட்டிடக்கலை ஆகும். இது மறுமலர்ச்சிக் கட்டிடக் கலையிலிருந்து உரோமானிய மனிதநேயக் கூறுகளை எடுத்து அவற்றைப் புதிய பாணியில் பயன்படுத்தியது. நிறம், ஒளியும் நிழலும், சிற்பக்கலைக்குரிய பெறுமானம் மற்றும் செறிவு ஆகியவற்றில் எழுந்த புதிய முயற்சிகள் பரோக் கட்டிடக்கலையின் சிறப்பம்சங்களாக கருதப்பட்டன. இந்த பாணியில் பல பெரிய தேவாலயங்கள், அபேக்கள் மற்றும் பசிலிக்காக்கள் கட்டப்பட்டுள்ளன.

**ரோகோகோ கட்டிடக்கலை**

ரோகோகோ கட்டிடக்கலையானது பரோக் கட்டிடக்கலையின் பிந்தைய பரிணாமமாகும். இது முதலில் பிரெஞ்சு உள் நாட்டுக் கட்டிடக்கலை மற்றும் வடிவமைப்பில் வெளிப்பட்டது. ஆனால் அதன் அலங்காரத்தில் காணப்படும் சமச்சீரற்ற தன்மையால் இது வேறுபடுகிறது.

**தூய அலங்கார உபகார மாதா ஆலய வரலாறு**

தமிழகத்தின் தென்கோடியாகிய கன்னியாகுமரியில் காவிய ஓவியமாய் வானுயரக் காட்சியளித்து திரளான மக்களையும், சுற்றுலாப் பயணிகளையும் கவர்ந்திழுக்கும் தூய அலங்கார உபகார அன்னை திருத்தலம் நூற்றாண்டு வரலாற்றுச் சிறப்புடையது. இத்திருத்தலம் கி.பி.1900 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் நாள் அடிக்கல் நாட்டப்பட்டு ஆலயப் பணிகள் தொடங்கப்பட்டன. இங்கு 1914ஆம் ஆண்டு முதல் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. அப்போது முற்றுபெறாத நிலையில் இருந்த திருத்தலக் கோபுர பணிகள் 1954 ஆம் ஆண்டு மீண்டும் தொடரப்பட்டது. முக்கோபுரங்கள், பளிங்கு சிப்ஸ் தளம், வெளிப்புற அலங்கார வேலைப்பாடுகள் யாவும் 1956 ல் நிறைவுபெற்றன. தங்கத்தால் செய்யப்பட்;ட 10 அடி உயர சிலுவை நடுகோபுர உச்சியில் நிறுவப்பட்டது. சிம்மாசனப் பீடமும், திருப்பலி பீடமும் இத்தாலியில் இருந்து கொண்டுவரப்பட்ட வண்ணக்கலை மார்பினால் ஆனவை. இந்த சிம்மாசன பீடத்தில் வீற்றிருப்பவர் தூய உபகார அன்னை ஆவார்.

கி.பி.1218-ல் கிறிஸ்தவர்களை சிறைப்பிடித்த முகமதியர்களிடமிருந்து அவர்களை மீட்டு ஸ்பெயின் நாட்டில் குடியமர்த்தி விடுதலை கொடுத்த துறவற சபையின் பாதுகாவலி தூய உபகார அன்னை ஆவார். இந்தக் கோவிலுக்கு முந்தைய கோவில் பீடத்தில் வீற்றிருப்பவர் அலங்கார அன்னை. இவ்விரு பெயர்களையும் இணைத்து 'அலங்கார உபகார அன்னை" என்று கன்னியாகுமரி மக்கள் அழைத்து வருகிறார்கள். உள்ளூர் கடல் தொழிலாளர்களும், பிற தொழில் புரிபவர்களும் தங்கள் வருமானத்தில் பத்தில் ஒரு பகுதியை இத்திருத்தலப் பணிக்காக காணிக்கையாக்கியதோடு தங்கள் உடலுழைப்பையும் கொடுத்தது குறிப்பிடத்தக்கதாகும். கி.பி. 1542-ல் தூய சவேரியார் குமரிக்கு வந்தபோது தூய மகிழ்ச்சியின் அன்னை குடிசைக் கோவில் இருப்பதைக் கண்டு பெருமிதம் கொண்டார். இந்தக் குடிசைக் கோவில்தான் சிறிது சிறிதாக மாற்றம் கண்டு தூய அலங்கார அன்னை ஆலயமாக கி.பி.1700-ஆம் ஆண்டு வடிவம் பெற்றது. இவ்வாலயத்தின் பொற்பீடம் இன்றும் மங்கா ஒளி வீசிக் காண்போரை திகைப்பில் ஆழ்த்துகிறது. பீடத்தின் நடுவில் தூய அலங்கார அன்னையும், வலப்பக்கம் தூய யோசேப்பும், இடப்பக்கம் தூய பிரான்சிஸ் சவேரியாரும் இடம்பெற்றுள்ளனர். உரோமை கலையம்சத்துடன் கட்டப்பட்ட இத்திருத்தலத்தின் தளம் கடல் மட்டத்தை விட 13 அடி தாழ்வாய் இருப்பது இதன் தொன்மையைச் சுட்டுகிறது.

**ஆலயக் கட்டிடக்கலை வடிவமைப்பு**

கன்னியாகுமரி தூய அலங்கார உபகார மாதா தேவாலயம் மற்ற தேவாலய கட்டிடக்கலைகளிலிருந்து வேறுபட்டது. இத்தேவாலயத்தின் பாணி பொதுவாக பிரிட்டிஷ் பாணி என்று குறிப்பிடப்படுகிறது. குறிப்பாக இவ்வாலயம் கோதிக் மற்றும் நியோ-கோதிக் கட்டிடக்கலைப் பாணியில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்திருத்தலத்தின் நீளம் 153 அடியாகவும், அகலம் 53 அடியாகவும், உயரம் 153 அடியாகவும் உள்ளது. இவை செபமாலை மணிகளைக் குறிப்பதாக அமைந்துள்ளன. ஆலயத்தின் முன் அமைந்துள்ள மூன்று வாசல்கள் மூவொரு கடவுளை சுட்டுகின்றன. நான்கு பக்க வாசல்கள் நற்செய்தி நூல்கள் நான்கினையும் குறிக்கின்றன. ஆலயத்தின் உட்புறத்திலுள்ள 14 தூண்கள் பக்கத்திற்கு ஏழாக அமைக்கப்பட்டு ஏழு

திருவருட்சாதனங்களை உணர்த்தி நிற்கின்றன. ஆலயத்திலுள்ள பத்து சாளரங்கள் பத்துக்கட்டளைகளையும், ஒன்பது பின்பக்க சின்ன கோபுரங்கள் பரிசுத்த ஆவியின் கனிகளையும் சுட்டிக்காட்டுகின்றன. ஆலயத்தின் முன்னுள்ள இரண்டு பெரிய கோபுரங்கள் தூய சவேரியார் மற்றும் தூய தோமையார் குமரியில் செய்த பணிகளின் நினைவு சின்னங்களாக எழுப்பப்பட்டுள்ளன. ஆலய மேற்பகுதியில் அமைந்த 12 சிறிய கோபுரங்கள் இயேசுவின் 12 சீடர்களை நினைவுப்படுத்தும் விதமாக வடிவமைக்கப்பட்டுள்ளன.

### சிலுவை வடிவம் (Axis)

தூய அலங்கார உபகார மாதா ஆலயம் பழமையான கட்டிடக்கலையைப் பிரதிபலிக்கும் விதமாக சிலுவை வடிவத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாலயம் கிழக்கு-மேற்கு திசையில் கட்டப்பட்டுள்ளது. மேற்குப்பக்கம் நோக்கி ஆலய முன்பகுதியும் கிழக்குப்பக்கத்தில் பலிபீடம் அமைந்திருக்கும் உட்புறப்பகுதியும் உள்ளன.

### ஆலய நடுக்கூடம் (Nave)

ஆலய நடுக்கூடம் என்பது ஒரு தேவாலயத்தின் உட்பகுதியில் காணப்படும் மையப்பகுதியாகும். கன்னியாகுமரி ஆலயமும் கோதிக் கட்டிடக்கலை வடிவமைப்பில் அமைந்த அகலமான நடுக்கூடத்தைக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. உயர்ந்த அகலமான மையப்பகுதியின் இருபுறமும் ஆர்கேட்டுகளால் பிரிக்கப்பட்டுள்ளன. ஆலயத்தின் மையப்பகுதியினை ஆங்கிலத்தில் 'நேவ்' என்று அழைப்பர். நேவ் என்றால் கப்பல் வடிவப் பகுதியாகும். இவ்வாலயத்தின் நிலைக்கோடு நுழைவாயில் கதவுகளுக்கும், பலிபீடத்திற்கும் இடையில் அமைந்துள்ளது.

### குறுக்குவெட்டுப் பகுதி (Transept)

சிலுவை அடையாளத்தின் குறுக்குப் பகுதியைப் போன்று ஒரு தேவாலயத்தின் குறுக்குவெட்டுப் பகுதியைக் குறிப்பது டிரான்செப்ட் என்பதாகும். நேவ் மற்றும் ட்ரான்செப்ட் சந்திக்கும் இடம் 'குறுக்குவெட்டு கிராசிங்' என்றழைக்கப்படுகிறது. கன்னியாகுமரி தேவாலயத்தில் நேவ் மற்றும் ட்ரான்செப்ட் சந்திக்கும் இடத்தில் ஒரு சிறிய குவிமாடம் அமைக்கப்பட்டுள்ளது.

### முகப்பு (Facade)

தூய அலங்கார உபகார அன்னை ஆலயத்தின் முகப்பு பகுதியில் மூன்று வாயில்கள் உள்ளன. இவ்வாயில்கள் சிற்பங்கள் தடங்களுடன் (Tracery) மிகவும் அலங்காரம் செய்யப்பட்டுள்ளன. முகப்பிலுள்ள பெரிய சாளரம் கம்பிகளால் பல்வேறு விகிதாச்சாரத்தில் பிரிக்கப்பட்டுள்ளது. இச்சாளரத்தின் கதவுகளில் கலையம்சத்துடன் கூடிய சிற்பங்கள் பொறிக்கப்பட்டு மக்களை ஈர்க்கக்கூடிய வகையில் அமைக்கப்பட்டுள்ளன.

**கோபுரங்கள்**

மேல்நோக்கி உயரும் கோபுரங்கள் தேவாலயங்களில் அதிகமாகக் காணப்படும். ஒரு குவிமாடம், மத்திய கோபுரம், இரண்டு மேற்கு கோபுரங்கள், ஆலயத்தின் உட்புறத்தில் இரண்டு பக்கத்திலும் காணப்படும் தூண்களின் நீட்சியாக ஆலயத்தின் மேல் காணப்படும் சிறுகோபுரங்கள் ஆகியவை கோதிக் கட்டிடக்கலைப் பாணியாக தேவலாயங்களில் அமைக்கப்பட்டிருக்கும். அவ்வாறே இவ்வாலயத்தின் முன் மேற்கூரையில் மூவொரு கடவுளைக் குறிக்கும் மூன்று கோபுரங்களும், பக்கவாட்டில் இயேசுவின் 12 சீடர்களை குறிக்கும் 12 சிறு கோபுரங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. இந்த சிறு கோபுரங்கள் பட்ரஸ்கள் என்று அழைக்கப்படுகின்றன. இதில் பறக்கும் பட்ரஸ்கள் என்ற மற்றொரு வகைக் கோபுரங்களும் காணப்படுகி;ன்றன. பறக்கும் பட்ரஸ்கள் பாதி வளைவு வடிவத்தில் வடிவமைக்கப்பட்டிருக்கும்.

**வண்ணமேற்றிய கண்ணாடி சாளரங்கள்**

கிறத்தவ வழிபாட்டுத் தலங்களில் வண்ணமேற்றிய கண்ணாடி சாளரங்கள் பல வடிவமைக்கப்பட்டுள்ளன. இத்தகைய சாளரங்கள் கோதிக் கட்டிடக்கலையில் அமைந்த பல தேவாலயங்கள் மற்றும் கதீட்ரல்களி;ன மிகவும் பரவலாகவே காணப்படுகின்றன. இவ்வாலயத்திலும் இத்தகைய சாளரங்கள் மிகவும் உயரமானவையாகவும், வளைந்த வடிவத்திலும் வடிவமைக்கப்பட்டுள்ளன. இக்கண்ணாடி சாளரங்கள் இயற்கையான ஒளியினை ஆலயத்திற்குள் அனுமதிக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன.

**அலங்கார கூறுகள் (Decorations)**

ஒரு தேவாலய கட்டிடத்தின் அலங்காரம் பெரும்பாலும் கட்டிடக்கலை மற்றும் உருவப்படங்களைக் கொண்டது. இது மிகவும் பிரமாண்டமாகவும், உயர்ந்ததாகவும் அமைக்கப்பட்டிருக்கும். உயரமான கூரைகள், சுவர்த்தாங்கி, நெடுவரிசைகள், வண்ணக் கண்ணாடி சன்னல்கள், ரோஜா சன்னல்கள், சிற்பங்கள் ஆகியவை கோதிக் கலையில் வடிவமைக்கப்பட்ட தேவாலயங்களில் காணப்படும். அவ்வாறே இத்திருத்தலமும் மிக உயர்ந்த கூரைகள், கோபுரங்களைக் கொண்ட சுதை சிற்பங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளன. ஆலயத்தின் பிரதான கோபுரத்தில் புனித தோமையார் மற்றும் புனித சவேரியாரின் சிலைகள் வைக்கப்பட்டுள்ளன.

**கொடிமரம் (Flagstaff)**

தூய அலங்கால உபகார அன்னை திருத்தலத்தின் முன் கம்பீரமாக நிற்கும் இரும்புக் கொடிமரத்தை 1917ஆம் தூத்துக்குடியைச் சேர்ந்த வணிகரான கயத்தார் வில்லவராயன் என்பவர் இவ்வாலயத்திற்கு நன்கொடையாக காணிக்கையாக்கினார். கொடிமரம் கடல்வழியாக கட்டுமரத்தில் கொண்டு வரப்பட்ட போது கட்டுமரம் கடலில் மூழ்கி, பின்னர் மிதக்க ஆரம்பித்தது. பின்னர் சாலை வழியாக கட்டுமரம் கன்னியாகுமரி ஆலயத்திற்கு கொண்டு வரப்பட்டு அதனை நடுவதற்காக, ஒரு கல்லைத் துளையிட்டு அதனை பூமிக்குள் அதிக ஆழத்தில் பதித்து அதில் இரும்பு கொடிமரத்தை நிறுத்தி, அது அசையா வண்ணம் ஈயத்தை காய்ச்சி ஊற்றி நிறுவியுள்ளனர்.

**தங்கத் தேர்கள் (Golden cars)**

கன்னியாகுமரி தூய அலங்கார உபகார அன்னை ஆலயத்தில் இரண்டு தங்கத் தேர்கள் செய்யப்பட்டுள்ளன. அதில் ஒன்று 1998ஆம் ஆண்டு அன்னை மேரிக்காக தயாரிக்கப்பட்டது. இரண்டாவது தேர் 1833-ல் மேரி மாதாவின் துணைவரான புனித யோசேப்பிற்காக உருவாக்கப்பட்டது. மரசெதுக்கல்கள் நிறைந்த இந்த தேர்கள் தேவாலய திருவிழாவின் 9-வது நாள் பவனியாக ஊரைச் சுற்றி கொண்டு வரப்படுகின்றன.

**முடிவுரை**

கன்னியாகுமரி தூய அலங்கார உபகார அன்னை தேவாலயம் குமரி வாழ் பரதவ கிறித்தவர்களின் பங்கு ஆலயமாக விளங்குகிறது. கிறித்தவர்களின் மிகச் சிறந்த கட்டிடக்கலை பாணியான கோதிக் மற்றும் நியோ கோதிக் வடிவமைப்பில் கட்டப்பட்ட இவ்வாலயம் திருச்சபை சட்டத்தின் கீழ் 2011ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் சனிக்கிழமை காலை நடைபெற்ற திருவிழா திருப்பலியில் அன்றைய கோட்டாறு மறைமாவட்ட ஆயர் மேதகு பீட்டர் ரெமிஜியுஸ் அவர்களால் திருத்தலமாக அறிவிக்கப்பட்டது. தெற்கு திருவிதாங்கூர் கட்டிடக்கலை வரலாற்றில் ஒரு தனித்துவமான அமைப்பைக் கொண்ட கட்டிடக்கலைக்கு சிறந்த சான்றாக வானுயர்ந்து நிற்பது கன்னியாகுமரி தூய அலங்கார உபகார அன்னை திருத்தலமாகும்.

**துணைநூற்பட்டியல்**

[1] ஐசக் அருள்தாஸ். ஜி., குமரி மண்ணில் கிறிஸ்தவம், தமிழ் ஆய்வு மையம், நாகர்கோவில், 2012.

[2] நற்சீசன். சே.ரோ., குமரி கிறிஸ்தவர்களின் பயணப் பாதை, நாஞ்சில் பதிப்பகம், நாகர்கோவில், 2012.

[3] *கோதிக் கட்டிடக்கலை.* பிரிட்டானிக்கா. www.britannica.com>art 23.11.2021.

[4] கோதிக் கட்டிடக்கலை. விக்கிபீடியா. en.m.wikipedia.org>wiki 23.11.2021.

[5] தூய அலங்கார உபகார அன்னை ஆலயம், கன்னியாகுமரி. விக்கிபீடியா, en.m.wikipedia.org>wiki 23.11.2021.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.